# பெண்களின் குறைந்தபட்ச திருமணவயதை 18லிருந்து 21ஆக மாற்ற வேண்டாம்

இந்திய அரசு பெண்களின் சட்டப்படியான திருமண வயதை 18லிருந்து 21ஆக உயர்த்துவதற்கு ஆலோசித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக இந்தியாவிலுள்ள 15 மாநிலங்களைச் சேர்ந்த, சமூக மற்றும் பொருளாதாரத்தில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட பின்னணியிலுள்ள 2500 இளையோர்களாகிய நாங்கள், 96 குடிமைச் சமூக நிறுவனங்கள் தேசிய அளவில் எளிதமைத்த செயல்பாட்டில் இது குறித்த எங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டோம்.

உங்களில் சிலருக்கு, அரசின் இந்தப் பரிந்துரை ஒரு முன்னேற்றத்திற்குரிய மாற்றமாகத் தோன்றலாம். ஆனால் இளையோர்களாகிய நாங்கள் சிறிதும் அப்படிக் கருதவில்லை.

முன்மொழியப்பட்டுள்ள இந்த மாற்றம் குறித்து எங்கள் கவலைகளையும் நாங்கள் அக்கறை கொள்பவை குறித்தும் இதன்மூலம் பகிர்ந்து கொள்கிறோம்.

1.திருமண வயதை உயர்த்துவது, பெண்குழந்தைகள் கல்வி பெறுவதை ஒருபோதும் மேம்படுத்தாது. எங்கள் குடியிருப்புக்கு அருகில், பாதுகாப்பான, தரமான மற்றும் இலவசக்கல்வி கிடைப்பதை அது உறுதி செய்யாது.

2.திருமண வயதை உயர்த்துவது, இளையோர் மீது அழுத்ததையும், வன்முறையையும், அவர்களை குற்றவாளிகளாக்கும் போக்கையும் அதிகரிக்கச் செய்யும்.

3.திருமண வயதை உயர்த்துவது, பெண் குழந்தைகளைப் பாரமாகக் கருதி, வற்புறுத்தலின் பேரில் எங்களுக்குக் கட்டாய இளவயதுத் திருமணம் செய்விக்கும் எங்கள் பெற்றோரின் மனநிலையையும் இவற்றை ஆதரிக்கும் சமூக விதிமுறைகளையும் மாற்றப் போவதில்லை.

4.திருமண வயதை உயர்த்துவது, எங்களுக்கு வேலைவாய்ப்பையோ அல்லது முன்னேற்றம் அடைவதற்கான பிற வாய்ப்புகளையோ வழங்கப் போவதில்லை.

இதற்கு மாறாக நாங்கள் கோருவது:

1.தரமான, சமமான, இலவசக்கல்வி பெறும் உரிமை.

2.எங்களைக் குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும் எல்லாத்தளங்களிலும் பங்கேற்கும் மற்றும் எங்களது கருத்துக்கள் கேட்கப்படும் உரிமை.

3.பாலுறவு, இனப்பெருக்க உடல்நலம் மற்றும் மனநலம் குறித்த உரிமை, அத்துடன் எங்கள் உடல்மீதான எங்கள் உரிமை.

4.போதிய வருவாய் ஈட்டக்கூடிய பாதுகாப்பான வேலைவாய்ப்புகளுக்கான உரிமை.

எங்களுடன் இணைந்து, பெண்களின் திருமண வயதை உயர்த்துவதற்கான இந்த முன்மொழிவை நிறுத்துவதற்கும் மற்றும் இளையோரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தை கேட்பதற்கான இந்த மனுவில் கையொப்பமிட அன்புடன் வேண்டுகிறோம்.

இந்த மனுவில் கையொப்பமிடும்போது உங்கள் கருத்துக்களையும் பதிவிடுங்கள். மேலும் இதை உங்கள் கூட்டமைப்புகளில் பகிர்ந்து கொள்வதோடு முடிவெடுக்கும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும், ஹேஷ்டேக்குகள் மூலம் தெரிவிக்கவும்.